நூல்களைத் தயாரிப்பதற்கான நூற்பாலையாக இருக்கும் என்றுதான் நான் சொன்னேன். மற்ற இடங்களில் இருந்து ஏதாவது கோரிக்கைகள் வருமானால், பின்னால் அரசின் பரிசீலனையிலே நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை உருவாகும் என்று சொன்னார்கள். திருப்பூரில் ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அதை எவ்வளவு ரூபாய் செலவில் ஆரம்பிப்பதாக இருக்கிறார்கள்? அப்படி ஆரம்பிப்பதால் திருப்பூர் நகரத்தில் உள்ளவர்களுக்கு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே திரு. மணிமாறன் அவர்கள் கேள்வி கேட்டபோது, அதுபற்றிய புள்ளிவிவரங்களை தாமே கொடுத்துக் கேட்டார்கள். அவற்றை அமைச்சர் சொல்லட்டும் என்று கூட எதிர்பார்க்கவில்லை. மூலக் கேள்வியையொட்டி துணை வினா கேட்கிற உறுப்பினர்கள் முன்னால் போடப்பெற்ற துணை வினாக்கள், அளிக்கப் பெற்றுள்ள பதில்கள் ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் முன்னால் கேட்கப்பெற்றுவிட்ட வினாவையே திரும்பவும் கேட்காமல் தவிர்க்க முடியும்.

விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண் 119—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, விளாத்திகுளம் பகுதி நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி, அந்தப் பகுதியில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, அரசு தனிக்கவனம் செலுத்தி, அந்த விளாத்திகுளம் பகுதியில் அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் துவங்க முன் வருமா? அது மட்டுமல்லாமல், அதற்கு பாரதி கூட்டுறவு நூற்பாலை என்று பெயர் வைக்க முன் வருமா?

(விடை இல்லை)

1981 ஜனவரி 30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, விளாத்திகுளம் மிகவும் பிற்பட்ட பகுதி. ஏற்கனவே பேட்டையில் உள்ள கூட்டுறவு நூற்பலையின் கிளை ஒன்றை எட்டயபுரத்தில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடத்தப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே, அந்தக் கிளையை எட்டயபுரத்தில் பாரதி நூற்றாண்டான இந்த ஆண்டில் ஏற்படுத்தி, அதற்கு பாரதி கூட்டுறவு நூற்பாலை என்று பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. பேட்டையில் இயங்கு கின்ற தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு பிற்பட்ட பகுதியில் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பல இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அது 12,000 கதிர் களுடன் இயங்கும் நிறுவனமாக விரைவில் ஆரம்பிக்கப்படும்.

திருச்சியில் தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம்.

*வினா எண் 120—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் (எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்) திருச்சியில் தொடங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த அலுவலகம் தொடங்கப் படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) திருச்சிராப்பள்ளியில் தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்காகத் தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிலையம் 1-11-80 முதல் தொடங்கப்பெற்று நடை பெற்று வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் தொடங்கியிருப்பது போல், தொழில் நுட்பத் தகுதி படைத்தவர்களுக்கு என்று தனியாக வேலைவாய்ப்பு நிலையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன? அவ்வாறு இல்லாத மாவட்டங்களிலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS